

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் – மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வேட்புமனு தாக்கல் செய்தார்.



குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் கே.எம்.ராஜ், தி.மு.க. தோழமைக் கட்சி நிர்வாகிகள் பேராதராவுடன் ஊர்வலமாகச் சென்று குன்னூர் சார் ஆட்சியரிடம் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். உடன் தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பா.மு.முபாரக்,இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் நாகராஜ், சிபிஐ மாநில குழு உறுப்பினர் பெள்ளி ஆகியோர் உள்ளனர்.



கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சூலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கொங்குநாடு மக்கள் கட்சி சார்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் நித்தியானந்தம் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதி கழக வேட்பாளர். டாக்டர். ஆ.க. தருண் வீரபாண்டி தொகுதி தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர். ஆ. பிரபு, ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### வேலூர் மாவட்டம் – காட்பாடி தொகுதி கிராமங்களில் தி.மு.க.வின்

# வாக்குறுதிகளை விளக்கி அமைச்சர் துரைமுருகன் வாக்குச் சேகரிப்பு!

## தேவாலயத்துக்குச் சென்று ஈஸ்டர் வாழ்த்துத் தெரிவித்தார்!

வேலூர், ஏப்.8-

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களில் தி.மு.க.வின் வாக்குறுதிகளை விளக்கி கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அங்குள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஈஸ்டர் வாழ்த்து தெரிவித்தார். காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் கழகப்பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் போட்டியிடுகிறார். அவர் காட்பாடி தொகுதிக்கு உட்பட்ட லாலாபேட்டை, நெல்லிக்குப்பம் பள்ளேரி, வசூர் ஏகாம்பரநல்லூர் மருதம்பாக்கம் உள்ளிட்ட 15க்கும் அதிகமான கிராம பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். தென்றல் நகர் பகுதியில் அவருக்கு கிராம மக்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது அமைச்சர் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேசியதாவது:

தி.மு.க.வின் ஐந்து ஆண்டு கால ஆட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பெண்களுக்கு வங்கியில் இருந்து திடீரென ஒரு நாள் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக தகவல் வந்தபோது அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆயிரம் ரூபாயாக இருந்த மகளிர் உரிமைத் தொகையை 2000 ரூபாயாகவும், பெண் பிள்ளைகள் கல்லூரியில் படிக்கும் போது வழங்கப்படும் ஆயிரத்தை 1500 ரூபாய் ஆகவும் வழங்குவதற்கான அறிவிப்பை முதலமைச்சர் கொடுத்துள்ளார். 1500 ரூபாயாக வழங்கப்பட்ட முதியோர் பென்ஷன் தொகை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு ஒய்வூதியம் 2000 ஆக மாற்றப்படும். காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் கரும்பு கொள்முதல் டன்னுக்கு ரூ.4000 ஆக உயர்த்தப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே உதயசூரியன் சின்னத்துக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும். மற்றவர்கள் அதை செய்வோம் இதை செய்வோம் என கூறுகின்றனர். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் அனைத்திற்கும் உத்தரவு வழங்கி விட்டு தான் வாக்குச் சேகரிப்பதற்காக வந்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதைத் தொடர்ந்து சீக்கராஜபுரம் பகுதியில் உள்ள தேவாலயத்திற்கு சென்ற அமைச்சர் துரைமுருகனுக்கு தேவாலயத்தின் சார்பில்வரவேற்பு அளிக்கப்பட்டது. தேவாலயத்தில் பேசிய துரைமுருகன் அவர்கள் அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அப்போது அவர் ஈஸ்டர் திருநாள் என்பது ஆண்டிற்கு ஒருமுறை நாம் நினைவு கூறும் வரலாற்று நிகழ்வு அல்ல அது உயிர் உள்ள ஒரு நம்பிக்கை என தெரிவித்தார்.

முன்னதாக காலை அவர் காட்பாடி காந்திநகர், விருதம்பட்டு, பர்னீஸ்புரம் காட்பாடி பகுதிகளில் உள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஆலய பாதிரியாளர்களை சந்தித்து ஆசிப் பெற்றார்.

அங்கு வந்த கிறிஸ்தவர்களுக்கு ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக் கூறி வாக்குச் சேகரித்தார். அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

சீக்கராஜபுரம் அருகே அக்ராவரத்தில் அவர் பிரச்சாரம் செய்த போது தேர்தலில் வெற்றி பெற வாழ்த்தி வேல் வழங்கப்பட்டது.

## 45 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி



தோற்றம் – 5.6.1921
மறைவு : 8.4.1981


**மிசா இரா.அருணாசலம்**
புதுக்கோட்டை

**அன்புத் தந்தையே!**
தாங்கள் வாழ்ந்த காலம் முழுவதும்
தலைவர் கலைஞர் வழியில்
வழுவாது தொடர்ந்த உங்கள் பயணத்தை
தங்கள் நினைவோடு,
தனயன் நான் தொடர்கின்றேன்;
**கழகத் தலைவர் தளபதி தலைமையில்!**

தங்கள் நினைவில் வாழும்
**அரு.வீரமணி எம்.ஏ,**
அவைத் தலைவர் –
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.
தலைவர் கலைஞர் தமிழ்ச்சங்கம்,

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா ஏ.டி. வேலு**
ஏப்ரல் 8 (2016)



கழகத்தில் ஐம்பது ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்.

ஒன்றிய அவைத் தலைவர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் கழகப் பணியாற்றியவர்..

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக, மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.